# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 27 வியாழக்கிழமை (11.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :165


# தலைவர் பிரபாகரனின் செய்தி எதுவும் அகாஷி ஊடாக அனுப்பப்படவில்லை

## கிளிநொச்சி வட்டாரங்கள் தகவல்

கிளிநொச்சி,மே11

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் விசேட செய்தியோ அல்லது கடிதமோ ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி ஊடாக இலங்கை அரசுக்கு அனுப்பப்படவில்லை.**

**கிளிநொச்சி வட்டாரங்கள் இத்தகவலை நேற்று வெளியிட்டன.**

ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி மற்றும் கொழும்புக்கான ஜப்பான் தூதுவர் அக்கியோ சூடா ஆகியோரைக் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் விசேட ஹெலிக்கொப்டரில் கிளிநொச்சி சென்று, புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் உயர்மட்டக் குழுவினரைச் சந்தித்துப் பேசினர்.

அந்தப் பேச்சின்போது தலைவர் பிரபாகரனின் விசேட செய்தி ஒன்று அகாஷியிடம் தெரியப்படுத்தப்பட்டது என்றும் -

அவர் அதை எடுத்து வந்து இலங்கை அரசுத் தரப்புக்கு எடுத்துரைக்க இருந்தார் என்றும்-

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்தாவது நாளாக பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,மே11

யாழ். குடாநாட்டில் படையினரின் அராஜகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஐந்தாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. இதனால், அரச நிர்வாகத்தின் செயற்பாடுகள் யாவும் செயலிழந்து காணப்பட்டன.

பாடசாலைகள், அரச திணைக்களங்கள், த்னியார் கல்வி நிறுவனங்கள் என்பன முற்றாக இயங்கவில்லை. வங்கிகள் ஒரு மணித்தியாலம் மட்டும் திறந்து மட்டுப்படுத்திய சேவையை வழங்கின. போக்குவரத்துச் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெற்றன. மக்கள் நடமாட்டமும் குறைந்திருந்தது. (ந-7)

## கொழும்பிலிருந்து அகாஷி புதுடில்லிக்குப் புறப்பாடு

கொழும்பு, மே 11

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி தனது இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று இரவு புதுடில்லி நோக்கிப் புறப்பட்டார்.

புதுடில்லியில் இந்திய அரசின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்திக்கவுள்ள அகாஷி, இலங்கையின் அமைதிப்பேச்சுகள் குறித்து நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் விவரங்களையும், சமாதான முயற்சியின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் விரிவாக

(08ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறைகளை உடன் கட்டுக்குள் கொண்டுவருவதாயின் அரசும், புலிகளும் விரைந்து பேச்சுக்குச் செல்லவேண்டும்

## அடித்துக் கூறுகின்றார் அகாஷி

கொழும்பு, மே 11

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைகளைக் கட்டுக்குள் கொண்டுவருவதாயின் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாக நேரடிப் பேச்சுக்குச் செல்வது அவசியமென்று இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி நேற்றுக் கொழும்பில் வற்புறுத்தித் தெரிவித்திருக்கிறார்.

அமைதி முயற்சிகள் தொடர்பில் அரசு மற்றும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை நடத்திய பின்னர் நேற்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் யசூசி அகாஷி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள

(08ஆம் பக்கம் பார்க்க)

## வேலணையில் கிளைமோர் இரு கடற்படையினர் காயம்

### சம்பவத்தையடுத்து மூவர் கைது!

கொழும்பு,மே11

வேலணைப் பகுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் கடற்படையினர் இருவர் படுகாயமடைந்தனர். இதனையடுத்துப் படையினரால் மூவர் கைது செய்யப்பட்டனர்.

வேலணை, வங்களாவடிச் சந்திக்கும் - அராலித்துறைச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ள இராசையா வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த கடற்படையினர் இருவரும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று படைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை -

இந்தச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில்தேடுதல்நடத்தியகடற்படையினர்வேலணை வடக்கைச் சேர்ந்த சகோதரர்களான மார்க்கண்டு தமிழ்ச்செல்வன் (வயது-21), மார்க்கண்டு ரகுநாதன் (வயது-23) ஆகிய இரு

(08ஆம் பக்கம் பார்க்க)

## இன்று முதல் 3 தினங்கள் திருமலையில் கதவடைப்பு

திருமலை,மே11

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அரச படையினரால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகளைக் கண்டித்து திருகோணமலையில் இன்று தொடக்கம் மூன்று தினங்களுக்குக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

திருகோணமலை மாவட்ட பொங்குதமிழ்ச் சமூகம் இதற்கான அழைப்பை விடுத்திருக்கிறது.

இந்தக் ஹர்த்தால் தொடர்பாகப் பொங்கு தமிழ்ச் சமூகம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், திருகோணமலை மாவட்டங்களில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இன அழிப்பு மற்றும் தமிழினம் மீதான அடக்குமுறை என்பவற்றைக் கண்டித்தும் -

மூதூரில் தமிழ், முஸ்லிம் மக்கள் விமானத் தாக்குதல் மூலமும் ஷெல் தாக்குதல் மூலமும் கொல்லப்பட்டு அகதிகளாக்கப்பட்டதைக் கண்டித்தும்-

'உதயன்' பத்திரிகைக் காரியாலயம் தாக்கப்பட்டு அந்த நிகழ்வில் இறந்த எம் சகோதரர்களுக்காகவும் -

திருகோணமலையில் வித்தியாலய வீதி

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து

## தமிழ்க் கூட்டமைப்பினருடன் பேசுவதற்கு ஜனாதிபதி முடிவு

கொழும்பு, மே 11

வடக்கு - கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் தனியாகப் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

நிதியமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நேற்று நாடாளுமன்றம் வந்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிற்றுண்டிச்சாலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை எதேச்சையாகச் சந்தித்து அவர்களுடன் அளவளாவினார்.

வடக்கு - கிழக்கில் தற்போதுள்ள நிலைமை குறித்தும், இதர பிரச்சினைகள் குறித்தும்

(08ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் மீது அரச பயங்கரவாதமா? அடியோடு மறுக்கிறார் அமைச்சர் நிமால்!

## நிலைமையை விளக்கி நாடாளுமன்றில் அவர் அறிக்கை

கொழும்பு,மே11

''அரச படையினரின் உதவியுடன் தமிழ் மக்கள் மீது அரசு பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனத் தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பி. மாவை சேனாதிராஜா கூறியிருப்பதை அரசு ஒருபோதும் ஏற்காது.

''அரசு ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டதில்லை. அரசுக்கும் புலிகளுக்கும் இடையில்தான் பிரச்சினையே தவிர அரசுக்கும் தமிழர்களுக்குமிடையில் அல்ல.

''எடுத்ததற்கெல்லாம் அரசின் மீது குற்றம் சுமத்தாமல் இப்பிரச்சினைகளுக்கெல்லாம் காரணமாகவுள்ள புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவருவதற்கு அவர்களுடனான தங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி தமிழ்க் கூட்டமைப்பினர் அழுத்தம் கொடுக்க வேண்டும்.''

- இவ்வாறு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நேற்றுமுன்தினம் மாவை சேனாதிராஜா நாடாளுமன்றில் அரசை விமர்சித்து ஆற்றிய

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நேற்று நாடாளுமன்றுக்கு திடீர் விஜயம்

கொழும்பு,மே11

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தொகுதிக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார். எனினும் அவர் சபைக்குச் சமூகம் தரவில்லை.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியின் குழு அறையில் நடைபெற்ற நிதியமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி இந்தத் திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

ஜனாதிபதியின் வருகையினையொட்டி நேற்று நாடாளுமன்றத்தை அண்மித்த பகுதி

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேச்சை இழுத்தடிக்க புலிகள் நடத்தும் கபட நாடகமே கருணா குழு விவகாரம்!

## அமைச்சர் மங்கள புதுடில்லியில் தெரிவிப்பு

சமாதானப் பேச்சில் கலந்துகொள்வதைத் தவிர்ப்பதற்காகப் புலிகள் நடத்தும் கண் துடைப்பு நாடகம்தான் கருணா அணி விவகாரம்.

கருணா குழுவிடமிருந்து ஆயுதங்களை அரசு களையவேண்டும் என்று புலிகள் நிபந்தனை விதிப்பது, அதைச் சாட்டாக வைத்துப் பேச்சை இழுத்தடிப்பதற்குத்தான்.

இப்படித் தெரிவித்திருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியாவுக்குச் சென்ற மங்கள சமரவீர தமது இந்திய விஜயத்தின் நோக்கம் குறித்து இந்தியாவில் செய்தியாளர்கள் மத்தியில் கருத்துக் கூறியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் சுமுகமான தீர்வு காணப்படவேண்டும் என்பதில் நாங்கள் முழு முயற்சியுடன் செயற்பட்டுவருகின்றோம். அதற்கு எவ்வளவு காலமானாலும் காத்திருக்கத் தயாராக இருக்கின்றோம்.

இந்தியாவும், இலங்கையும் நெருக்கமான நட்பு நாடுகள். எனது பயணத்தின்போது புதிதாகத் திட்டம் எதனையும் முன்வைக்கவில்லை. இரு நாடுகளும் உயர்மட்ட அளவில் அடிக்கடி சந்தித்துக் கருத்துப் பரிமாற்றம் நடத்துவதன் ஓர் அங்கமாகத்தான் எனது இந்தப் பயணம் அமைந்தது.

இலங்கையின் ஒற்றுமையும், இறையாண்மையும் காக்கப்படவேண்டும் என்பதில் இந்தியா எப்போதுமே உறுதுணையாக இருக்கிறது. இதை இலங்கை மக்களும் பாராட்டுகின்றனர்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காணப்படவேண்டும். இதற்கு நாம் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றோம்.

அமைதி முயற்சியை முன்னெடுத்துச் செல்வதில் உள்ள முழுப்பொறுப்பும் தற்போது விடுதலைப் புலிகளிடமுள்ளது என்பதை சர்வதேச சமூகம் அவர்களுக்குப் புரிய வைக்கவேண்டும்.

புலிகளை மீண்டும் பேச்சுமேசைக்குத் திரும்பவைக்கச் சர்வதேச சமூகம் தங்களின் அழுத்தத்தைப் பயன்படுத்தவேண்டும்.

புலிகளின் வாழ்வாதாரமான நிதி திரட்டும் நடவடிக்கைகளை முடக்க ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும்.

சமாதானப் பேச்சில் கலந்துகொள்வதைத் தவிர்க்க புலிகள் நடத்தும் கண்துடைப்பு நாடகம்தான் கருணா அணியினர் குறித்த விவகாரம்.

விடுதலைப் புலிகள் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி மற்ற மக்களைப்போல, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மக்களையும் வாக்களிக்க அனுமதித்து நேர்மையாகத் தேர்தல் நடத்த முன்வந்தால் அவர்களுடன் இணக்கமாகச் செயற்பட இலங்கை அரசு தயாராகவுள்ளது.

- என்றார் மங்கள சமரவீர. (க)

# புலிகள் எப்படிச் சீண்டினாலும் உணர்ச்சிவசப்படாதாம் அரசு!

## ஆனால் அது பலவீனம் அல்ல என்கிறார் நிமால்!

கொழும்பு,மே11

"புலிகள் எவ்வளவுதான் - எப்படித்தான் - அரசைச் சீண்டினாலும் நாம் உணர்ச்சி வசப்பட்டு புலிகளின் பொறியில் சிக்கிக் காரியத்தைக் கெடுத்துவிடமாட்டோம். அதற்காக அரசு பலவீனமாக உள்ளது என்று எவரும் கருதக்கூடாது. சர்வதேச நாடுகளை வளைத்துப் போட்டுக்கொண்டு புலிகளின் சதித்திட்டத்தை தோற்கடித்து நிச்சயம் சமாதானத்தை உருவாக்குவோம். இந்த விடயத்தில் நாம் ஒருபோதும் பின்நிற்கமாட்டோம்."

- இவ்வாறு சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசும்போது தெரிவித்ததாவது:-

அவரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து நீடித்துக்கொண்டே போகும் எண்ணம் அரசிற்கு இல்லை. நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள நிலைமைதான் இச்சட்ட நீடிப்புக்குக் காரணம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நாம் அழைப்பதுபோல் பேச்சு மேசைக்கு வந்தால் இந்த மாதிரியான நிலைமைகள் ஏற்படாது. புலிகளைப் பேச்சுக்கு அழைக்கும் அனைத்து முயற்சிகளிலும் நாம் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ளோம். ஆனால், புலிகள் அம்முயற்சிகளைக் குழப்பியடிக்கப் பார்க்கின்றனர். எதற்கும் நாம் இடம்கொடுக்கமாட்டோம்.

புலிகளைப் பேச்சுக்கு கொண்டு போக புலிகள் கேட்கின்ற ஹெலிகொப்டர் வசதியைச் செய்துகொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், புலிகள் அதிலிருந்து நழுவுகின்றனர்.

அரசு, புலிகள் கேட்கின்ற அத்தனை வசதிகளையும் செய்துகொடுக்க இருப்பதால், அரசு பலவீனமாக உள்ளது என்று சொல்லக்கூடாது. சமாதானத்தை உருவாக்க நாம் நெகிழ்வுத் தன்மையுடன் செயற்படுகிறோம் என்பதையே அரசின் இந்த நடவடிக்கை காட்டுகிறது.

எந்தத் தருணத்திலும் புலிகளின் செயலால் கோபப்பட்டு - உணர்ச்சிவசப்பட்டு யுத்த்தைத் தொடங்கும் முயற்சியில் நாம் இறங்கவே மாட்டோம். முழுப் பலத்தையும் பயன்படுத்தி நாம் சமாதானத்தை நிலைநாட்டுவோம் - என்று கூறினார். (க)

# தலைவெட்டுக் கலாசாரத்தை நிறுத்த அரசு என்னதான் செய்யப்போகிறது?

## கேட்கிறார் செல்லச்சாமி எம்.பி.

எல்லாவற்றிலும் புதுமையும் வித்தியாசமும் ஏற்படுவதுபோல் இப்போது இலங்கையில் கொலை செய்வதிலும் வித்தியாசமும் புதுமையும் ஏற்பட்டுவிட்டன. அடையாளங் காணமுடியாதவாறு தலையை வெட்டி எடுத்துவிட்ட முண்டத்தை மாத்திரம் போட்டுவிட்டுப் போகும் ஒரு வித்தியாசமான கொலை இப்போது இலங்கையில் அறிமுகமாகியுள்ளது. தலைவெட்டும் கலாசாரத்தை இத்தோடு நிறுத்திவிட அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது?

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். செல்லச்சாமி நேற்றுமுன்தினம் நாளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டிலே ஒருவகையான கொலைப் பீதி ஏற்பட்டுள்ளது. மனித உயிர்கள் வகைதொகையின்றிக் கொல்லப்படுகின்றன. இந்த நிலைமையை நீடிக்க விடுவது நல்லதல்ல.

சமாதானத்தை நிலைநாட்டி இனங்களுக்கிடையிலான சந்தேகங்கள், அச்ச உணர்வுகள் போன்றவற்றை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வளவு காலத்திற்குத்தான் எமது நாட்டு மக்கள் துன்பத்தோடு வாழ்வது.

இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு விடிவு வராதா? என மக்கள் ஏங்கிக் காத்திருக்கின்றனர். சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் தமது இனங்களின் நலன் கருதியும், நாட்டின் நலன் கருதியும், சமாதானத்தை நிலைநாட்ட முன்வரவேண்டும். இப்போது மக்கள் நடமாடவே அச்சப்படுகின்றனர். இனந்தெரியாதோரால் கடத்தப்படுகின்றனர்; கொல்லப்படுகின்றனர்; மறுநாள் காலை தலையில்லாத முண்டங்கள் காணப்படுகின்றன. யார் என்று அடையாளங் காண முடியாமல் போகின்றது.

இது மிகவும் கொடூரமான செயலாகும். எமது அழகிய நாட்டை அந்த நிலைக்கு இட்டுச் செல்லக்கூடாது. அரசு சமாதான முயற்சியில் ஈடுபட்டுவந்தாலும் அம்முயற்சி தீவிரப்படுத்தப்பட வேண்டும். புலிகளைப் பேச்சு மேசைக்கு அழைத்து வரவேண்டும். இல்லையேல் எமது நாட்டுக்கு விடிவு ஏற்படாது. (க)

# துணைக்குழு ஆயுதங்களை களையமுடியாவிட்டால் ஜெனிவாவில் எதற்காக வாக்குறுதி அளித்தீர்கள்?

## ஐ.தே.கட்சி எம்.பி. கிரியெல்லவின் நியாயமான கேள்வி இது!

அரசுடன் சேர்ந்தியங்கும் துணைப்படையினரின் ஆயுதங்களைக் களைய முடியாத அரசு தாம் அவர்களின் ஆயுதங்களைக் களைவோம் என ஏன் புலிகளுக்கு ஜெனீவாப் பேச்சில் வாக்குறுதியளித்தது?

அரசாங்கம் அவ்வாறு ஆயுதங்களைக் களைய முடியாவிட்டால், முடியாது என்று அப்போதே சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்யிருந்தால் இப்போது இந்தப் பிரச்சினை வந்திருக்காது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டின் தேசியப் பிரச்சினை தொடர்பாக அரசு ஒற்றை நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்று யாருக்கும் தெரியாது. யுத்தமா அல்லது சமாதானமா என்ற ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாத நிலையில் அரசு உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி இது தொடர்பாகத் தனது நிலைப்பாட்டைத் தயங்காது, அஞ்சாது மிகவும் தெளிவாக சமாதானம்தான் ஒரே 'வழி என்று அடித்துக்கூறியது. அதன்படி செயற்பட்டது. சமாதானத்தை நிலைநாட்டியது.

அந்தச் சமாதானத்தைச் சரியான முறையில் பின்பற்ற முடியாத காரணத்தாலேயே இப்போது நாட்டு நிலைமை மோசமடைந்துள்ளது.

இந்த நாட்டின் பிரச்சினை எந்த அடிப்படையில் தீர்க்க அரசு தீர்மானித்திருக்கிறது. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து பிரச்சினையைத் தீர்க்க ஜனாதிபதி தயாரா?

ஜெனீவாப் பேச்சின்போது துணைப் படைகளின் ஆயுதங்களைக் களையப் போவதாக அரசு வாக்குறுதியளித்துள்ளது. ஆனால், அது செய்யப்படவில்லை. அதனாலேயே பிரச்சினை வளர்த்துள்ளது. அப்படிச் செய்ய முடியாது என்றால் ஜெனிவாவில் வைத்தே புலிகளிடம் சொல்லியிருக்கலாம். முடியாது என்று. அப்போது அரசு புலிகளிடம் அடி பணிந்துவிட்டதா?

அரசின் நிலைப்பாடு தெரியாமல் இந் நாடு தடுமாறுகிறது. அரசு உடனடியாக தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவேண்டும். (க)

# வாகனப் பயணத்தை தவிர்த்து சைக்கிளில் திரியும் படையினர்!

## கிளைமோரில் இருந்து தப்பிக்க இந்த உத்தி!

மன்னாரில் 'கிளைமோர்' அச்சம் காரணமாக கடற்படையினர் இப்போதெல்லாம் கவச வாகனங்கள், ஜீப் வண்டிகளில் செல்வதில்லை. அதனை முடிந்தவரை தவிர்த்துவிட்டு, பெரும்பாலும் சைக்கிள்களிலேயே பயணிக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

பெரிய வாகனங்களில் அதிகளவு படையினர் செல்லும்போது அதன் மீது கிளை மோர் தாக்குதல் நடத்தப்பட்டால் அதிகள விலான படையினர் உயிரிழக்க நேரிடும் என்றும் - அதனால் ஏற்படும் பாரிய இழப்பைத் தவிர்ப்பதற்காகவே வாகனப் பயணங்களைத் விடுத்து படையினர் சைக்கிள்களில் சென்றுவருகின்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

சமீப காலமாக விடுமுறையில் வீடு சென்றுவிட்டுத் திரும்பும் படை யினர் மீது கிளைமோர் தாக்குதல்கள் அதிகளவில் நடத்தப்படுகின்றன. இதனாலேயே படையினர் இந்தப் புதிய உத்தியைக் கையாளத் தொடங்கி யிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் 'சனிவிலேஜ்' கடற்படை முகாமிலிருந்து கடற்படையினரின் பேருந்து வெறுமையாக மன்னார் கோட்டை இராணுவ முகாமுக்குச் சென்ற பின்னர் கடற்படையினர் துவிச்சக்கர வண்டிகளிலும், மோட்டார் சைக்கிள்களிலும் நகர நுழைவாயிலைத் தாண்டிச் சென்று அங்கிருந்து பேருந்துகளில் பலத்த பாதுகாப்புடன் செல்கின்றனர். இவ்வாறே மன்னார் கடற்படையினர் தமது நாளாந்த உள்ளூர்ப் பயணங்களுக்கும் பெரும்பாலும் சைக்கிள்களைப் பயன்படுத்தி வருகின்றனர். (க)

# தமிழர் பிரச்சினை தெரியாமல் பைத்தியம் மாதிரிப் பேசாதீர்!

## வீரவன்ஸவுக்கு மகேஸ்வரன் நெத்தியடி!

கொழும்பு,மே11

தமிழர்கள் மீது அரசு மேற்கொண்டுவரும் அடாவடித்தனம் குறித்து நேற்று நாடாளுமன்றில் கருத்துத் தெரிவித்து ஐ.தே. கட்சியின் எம்.பி. மகேஸ்வரன் பேசமுற்பட்டார். அப்போது அவரை பேசவிடாது குறிக்கிட்டு இடைமறித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ. அவ்வளவுதான். மகேஸ்வரனுக்கு கோபம் உச்சநிலைக்கேறிவிட்டது. விமல் வீரவன்ஸவை திரும்பி ஒரு பார்வை பார்த்தார். "நீர் ஒரு பைத்தியமா? தமிழர்கள் பிரச்சினை குறித்து எதுவுமே தெரியாமல் பைத்தியம் மாதிரிப் பேசிக்கொண்டிருக்காதீர்" என்று நெத்தியடி கொடுத்தார். அத்தோடு விட்டுவைக்கவில்லை "பைத்தியம் என்றால் போய் அங்கொட பைத்தியக்காரர் வைத்தியசாலையில் இரும்" என்றும் சாட்டையடி கொடுத்தார் மகேஸ்வரன்.

அவ்வளவுதான் பெட்டிப்பாம்பாக அடங்கிப் போனார் விமல்வீரவன்ஸ. அதற்குப் பிறகு குறுக்கீடில்லாமல் பேசி முடித்தார் மகேஸ்வரன். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

## சமாதானமா? ஒட்டுப்படைகளா? முடிவு அரசின் கைகளில்தான்!

இலங்கையின் அரசியல் கள நிலைவரங்களை அவதானிக்கின்ற நோக்கர்களுக்கு ஒரு விடயம் தெட்டத் தெளிவாகி வருகின்றது.

அது - இலங்கையில் யுத்தம் தவிர்க்க முடியாதது என்பதுதான்.

கொடூர யுத்தம் எப்போது வெடிக்கும்? இப்போது நடந்து கொண்டிருக்கும் நிழல் யுத்தம் எப்போது நிஜ யுத்தமாக உருவெடுக்கும்? - இதுதான் அரசியல் அவதானிகளின் கேள்வி.

யுத்தம் வெடிப்பதற்கான வாய்ப்பு எதிர்பார்த்ததை விடவும் வேகமாக நெருங்கி வருகின்றதாகவே தோன்றுகின்றது.

இலங்கை இராணுவ மட்டத்தில் மட்டுமல்லாமல் அரசியல் மட்டங்களிலும் கூட - அதுவும் ஜனாதிபதி மஹிந்தரின் அரசில் அதிகம் செல்வாக்குச் செலுத்தும் சிங்கள - பௌத்த தீவிரவாதப் போக்குடையோர் மத்தியிலும் கூட - யுத்தம் எதிர்பார்ப்போடுதான் வரவேற்கப்படுகின்றது.

அத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்ளும்போது அதைச் சமாளிப்பதற்கும், ஈடுகொடுப்பதற்கும் பிரதான கையிருப்பாகவும் சொத்தாகவும் துணை இராணுவப் படைகளைக் கருதுகின்றன இந்தச் சக்திகள்.

யுத்தம் வெடிப்பதை விரும்புகின்ற - அல்லது அது தவிர்க்க முடியாத யதார்த்தம் என்று கருதுகின்ற - தென்னிலங்கைச் சிங்களத் தலைமை, அப்போது கருணா குழு போன்ற தமிழ்த் துணைப் படைகளும், ஒட்டுக் குழுக்களும் தங்களுக்குப் பெருமளவில் கைகொடுக்கப் போகின்றன என்ற மாயையில் மூழ்கி நிற்கின்றன.

துணைப்படைகளையும், ஒட்டுக்குழுக்களையும் அரவணைத்து, ஊக்குவித்து, கட்டியவிழ்க்கும் தென்னிலங்கையின் செயல்பாட்டினால்தான் இன்றைய சமாதானச் சூழ்நிலை செயலிழந்து போகும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது என்ற உண்மையை - யதார்த்த சூழ்நிலையை - களமெய்மையை - கவனத்தில் எடுக்க மறுத்துள்ள அல்லது மறந்துள்ள தென்னிலங்கை, அவ்வாறு சமாதான சூழ்நிலை செயலிழந்து, யுத்தம் வெடிக்கும்போது ஒட்டுப்படைகளைக் கொண்டு எட்ட முடியாத இராணுவச் சாதனைகளை ஈட்ட முடியும் என்றும் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றது.

சமாதானமா? ஒட்டுப்படைகளா? - என்ற தெரிவில் ஒட்டுப் படைகளின் பக்கமே தென்னிலங்கை அரசியல் தலைமையின் தராசு சாய்ந்து நிற்கின்றது.

அரசின் இந்தப் போக்கையே புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கமும், அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் அண்மையில் வழங்கியுள்ள இருவேறு ஊடகப் பேட்டிகளில் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

*''அரச படைகளின் ஒத்தாசையோடு ஒட்டுப்படையாக - கருணாகுழு என்ற பெயரில் - இயங்கும் ஆயுதக் குழுவினரிடமிருந்து ஆயுதங்களைக் களைந்து, அவர்களை நிர்மூலமாக்கும் முழுப் பொறுப்பையும் தாங்களே கையேற்பதைத் தவிர விடுதலைப் புலிகளுக்கு வேறு வழியே கிடையாது'' - என்று 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' எடுத்துக் கூறியிருக்கின்றார் மதியுரைஞர் பாலா.*

அத்தகைய நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் தொடர்ந்து மேற்கொள்ளும்போது தற்போதைய நிழல் யுத்தம் தன்பாட்டில் நிஜயுத்தமாகும் என்பதையும் எவரும் புரிந்துகொள்வர்.

ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைவதற்கு மறுத்து வரும் தென்னிலங்கை அரசு, யுத்த நிறுத்த உடன்பாட்டின்படி இவ்விடயத்தில் தனக்குள்ள பொறுப்புகளையும், கடப்பாடுகளையும் உதாசீனம் செய்து, அதற்கு மாறாக ஒட்டுப் படைகளை ஊக்குவித்துத் தீனி போட்டு வளர்த்து வருகின்றது. இது யுத்தத்துக்கு வெற்றிலை வைக்கும் வேலை என்பதை பாலாவின் கருத்து பட்டவர்த்தனமாகத் தெளிவுபடுத்துகின்றது.

*''படைக்கு பெருந்தொகையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்தல், படைக்கு ஆட்திரட்டல், படைகளை யுத்தத்துக்குத் தயார் படுத்தல், துணை இராணுவக் குழுவினரைத் துணைக்கு வைத்துக்கொண்டு புலிகளைச் சீண்டுதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் ஒரு புறம் யுத்தத்துக்குத் தயாராகும் தென்னிலங்கை அரசுத் தலைமை, மறுபுறத்தில் சமாதானத்தில் அதீத ஈடுபாடு உள்ளது போலத் தன்னை சர்வதேச சமூகத்துக்குக் காட்டுவதற்கு நடிக்கின்றது.''*

- என்று குற்றம் சுமத்தியுள்ளார் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

துணைப்படைகளை வளர்த்து, அவற்றின் துணையோடு புலிக்ளைச் சீண்டும் நடவடிக்கையை யுத்தத்துக்கான ஆரம்ப எடுப்பாக - ஏற்பாடாக - சுட்டிக்காட்டுகின்றார் தமிழ்ச்செல்வன்.

ஆக, இன்றைய நிலையில் ஒட்டுப்படை விவகாரம்தான் சமாதானச் சூழ்நிலைக்கு வேட்டு வைக்கப் போகின்றது என்பது நிச்சயமாகி வருகின்றது.

ஒட்டுப்படைகளா? சமாதானமா? - எது தனக்குத் தேவை என்பதை அரசுத் தலைமைதான் முடிவு செய்ய வேண்டும்.

இதில் ஒன்று தேவை என்றால் மற்றதைப் பலி கொடுக்க வேண்டிய இக்கட்டு அரசுத் தலைமைக்கு. அரசு, எதைத் தேர்ந்தெடுத்துப் பற்றப் போகின்றது? எதைக் கைவிடப் போகின்றது? அடுத்த வாரங்களுக்குள் அரசு ஓர் இறுதித் தீர்மானத்தை இது விடயத்தில் எடுத்தேயாக வேண்டி இருக்கும் என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

# எரிபொருளை வாங்கி இருப்பில் வைத்து தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம்

## பொதுமக்களுக்கு அரச அதிபர் வேண்டுகோள்

எரிபொருளை வாங்கி இருப்பில் வைப்பதை மக்கள் தவிர்க்கவேண்டும். தேவையை விடக் கூடுதலாக எரிபொருளை வாங்கி செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்கவேண்டாம்.

- பொதுமக்களுக்கு இந்த வேண்டுகோளை யாழ். அரச அதிபர் கே.கணேஸ் விடுத்துள்ளார்.

எரிபொருள் விநியோகம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

தற்சமயம் தெற்கிலிருந்து சீராக எரிபொருள்கள் எடுத்துவரப்படுகின்றன. அத்துடன் குடாநாட்டில் வழமையாக விநியோகிக்கப்படும் எரிபொருளை விடக கூடுலான எரிபொருள் விநியோகம் செய்யப்படுகின்றது.

மக்கள் தங்கள் பாவனைக்குத் தேவையான எரிபொருளைவிடக் கூடுதலான எரிபொருளைக் கொள்வனவு செய்து இருப்பில் வைப்பதாலேயே எரிபொருளுக்கு இப்போதும் தட்டுப்பாடு தோன்றியுள்ளது.

இதன் மூலம் செயற்கைத் தட்டுப்பாடு உருவாக பொதுமக்கள் இடமளியாது, தேவைக்குரிய எரிபொருளை மட்டும் கொள்வனவு செய்து எரிபொருள் விநியோகத்தைச் சீராக மேற்கொள்ள ஒத்தழைப்பு வழங்கவேண்டும் - என்று அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அரசு மருத்துவர்களின் தனியார் சிகிச்சை மூன்று ஆண்டுகளுக்குள் முடிவுக்கு வரும்

## சுகாதார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,மே 11

அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்குள் தனியார் மருத்துவமனைகளில் அரசாங்க மருத்துவர்கள் பணிபுரிவது முற்றாக ஒழிக்கப்பட்டுவிடும் என்று சுகாதாரம் மற்றும் போஷாக்குத் துறை அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கொண்டுவரவிருக்கும் ஒரு புதிய திட்டத்தின்படி தனியார் மருத்துவமனைகள் மருத்துவ சபையின் மேற்பார்வையின் கீழ் வரும். இந்தச் சபையில் அரச துறையையும் தனியார் துறையையும் சேர்ந்த 24 மருத்துவர்கள் அங்கம் வகிப்பார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கண்காட்சியொன்றின் ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் சிறிபால டி சில்வா பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

தேசிய ஆரோக்கிய பராமரிப்புக் கண்காட்சி பண்டாரநாயக்க மாநாட்டு மண்பத்தில் நடைபெற்றது. தேசிய வர்த்தக சபையும் சுகாதார அமைச்சும் சேர்ந்து இந்தக் கண்காட்சியை நடத்தின.

அரசாங்க மருத்துவமனைகளில் உள்ள வெற்றிடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டதும் அரசாங்க மருத்துவர்களின் தனியார் சிகிச்சைப் பணிகள் நிறுத்தப்பட்டுவிடும். பொதுமக்களின் நலனில் அக்கறைகொள்ளாத மருத்துவர்களால் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற முடியாது. அவர்கள் பொதுமக்கள் பணத்தில் கல்வி பெற்றவர்கள். எனவே பொதுமக்களுக்கு பணியாற்றவேண்டிய தார்மீகக் கடமை அவர்களுக்குண்டு - என்று அமைச்சர் கூறினார்.

(ப)

## கனடா விபத்தில் தமிழ் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், மே 11

கனடா ரொறன்ரோவில் கடந்த 6ஆம் திகதி நடந்த வாகன விபத்து ஒன்றில் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அன்ரன் செல்வன்(வயது 26) என்ற இளைஞரே கொல்லப்பட்டவராவார்.

வேறு இருவருடன் இவர் காரில் வேலைக்குச் சென்று கொண்டிருந்தார் என்றும் -

வேகமாகச் சென்ற கார் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் இவர் உயிரிழந்தார் என்றும்- தெரிவிக்கப்பட்டது.

# சுற்றுச் சூழல் தினத்தையொட்டி நல்லாட்சி ஆணையத்தின் போட்டி

உலக சுற்றுச்சுழல் தினத்தை முன்னிட்டு தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையத்தினரால் கவிதை, கட்டுரை, கேலிச் சித்திரங்கள் ஆகியவற்றிற்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இத்துறைகளில் ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து மேற்படி போட்டிக்கான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆக்கங்கள் சுற்றுச்சுழல் சம்பந்தமான விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு அமையவேண்டும் எனவும் இப்போட்டிக்கு வயது வித்தியாசமின்றி அனைவரும் பங்கு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது டன் இப்போட்டிக்கு பங்குபற்ற விரும்புவோர் தமது ஆக்கங்களை 'சூழல் நல்லாட்சி ஆணையம், திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகம், பரவிப்பாஞ்சான், கிளி நொச்சி' எனும் முகவரிக்கு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கு மாறும் தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையத்தினர் கேட்டுள்ளனர்.

## சாதாரண தர பரீட்சையில்....

கொழும்பு,மே 11

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய 4 லட்சத்து 49 ஆயிரத்து 679 மாணவர்களில் 22 ஆயிரத்து 900 பேர் தாம் தோற்றிய எந்தவொரு பாடத்திலும் சித்தியடையவில்லை என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைத்குத் தோற்றியோரில் அனைத்துப் பாடங்களிலும் 5.14 சதவீதமானோர் சித்தியடைந்துள்ளனர் என்று பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குத் தோற்றிய 4 லட்சத்து 49 ஆயிரத்து 679 பேரில் 46.61 சதவீதமானோர் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பிற்குத் தகுதி பெற்றுள்ளனர் என்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# அடுத்த ஆண்டு பாடசாலைகளில் மாணவரைச் சேர்க்கச் சுற்றறிக்கை

கொழும்பு,மே 11

அடுத்த கல்வி ஆண்டுக்காக தேசிய மற்றும் பிரதேச பாடசாலைகளில் முதலாம் ஆண்டில் கல்வி கற்பதற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக பொதுச்சுற்றறிக்கை ஒன்றை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதன்படி அடுத்த ஆண்டு முதலாம் ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் -

மாணவர்களைத் தேர்ந் தெடுப்பதற்கான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களின் கீழ் இடம்பெறுமெனவும் - அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய சுற்றறிக்கைக்கு அமைய மாணவர்களைத் தெரிவுசெய்யும் விதம் குறித்து அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் -

இம்மாத நடுப்பகுதியில் அது அமைச்சரவையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் -

கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உதயவாக்கு

**தான் முக்கியமானவன் என்று காட்டிக்கொள்பவன் தனக்கு ஆற்றலில்லை என்பதையே காட்டுகிறான்.**

*- ஸ்லேட்டர்.*

## நாளை

**சித்திரை : 29**
**வெள்ளிக்கிழமை**
**12.05.2006**
**திதி : சதுர்த்தசி**
**பிற்பகல் : 12.03**
**நட்சத்திரம் : சுவாதி**
**முன்னிரவு : 8.11**
**சித்திரா பூரணை விரதம்**
**சுபநேரம் : 05.54 - 07.24**
**ராகுகாலம் : 10.24 - 11.54**



அனுராதபுரம் மாவட்ட எல்லையோர கிராமங்களில் வசிப்பவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுகிறது. விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்புப் பெறவே இப்பயிற்சி வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

எல்லைக் கிராமம் ஒன்றைச் சேர்ந்த யுவதிகளுக்கு மதவாச்சி பொலீஸ் நிலைய பொலீஸார் கடந்த செவ்வாய்க்கிழமை ஆயுதப் பயற்சி வழங்கியபோது எடுக்கப்பட்ட படம் இது.

*(நன்றி :டெய்லிமிரர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு மம்மில் பிள்ளையார் ஆலய
## சித்திரா பௌர்ணமி விழா

மாங்குளம் அம்பகாமம் கிராமத்தில் கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ மம்மில் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த சித்திரா பௌர்ணமி தினத்தையொட்டி எதிர்வரும் விய வருடம் 12.05.2006 (வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு எம்பெருமானுக்கு அபிஷேகமும், நண்பகல் 12.30 மணிக்கு விசேட பூஜையும் நடைபெற்று. அன்னதானமும் வழங்கப்படும். இரவு கலை நிகழ்வுகள் நடைபெறும் என்பதனையும் அறியத் தருகின்றோம். ஆகவே, அன்றைய தினம் எம்பெருமானைத் தரிசித்து அருளினைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

(50092)(26) **ஆலய பரிபாலன சபை.**

## கண்ணீர் அஞ்சலி

*யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையின் ஆசிரியை திருமதி சா.ஸ்ரீநிவாசன் அவர்களின் அன்புத் தாயார்*

**திருமதி கற்பகம் செல்வநாயகம்** அவர்கள்

*08.05.2006 அன்று இறைபதமடைந்தமையால் துயருறும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையக் கடவுளைப் பிராத்திக்கின்றோம்.*

(50089)(23) *ஆசிரிய நலன் புரிச்சங்கம்*
*யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை.*

## 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்*
*01 * 08 * 1889*



*மறைவு*
*08 * 04 * 1982*

(50084)

**சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை**
*(முன்னாள் ஆசிரியர், நடேஸ்வராக் கல்லூரி - காங்கேசன்துறை)*
*(1907 - 1949) திதி: திரயோதசி - 11.05.2006*

நாங்கள் உன்னை மறந்தாலும் - 42 ஆண்டுகளும் உன் கால் பதிந்த அந்தக் காங்கேசன்துறை மண் உன்னை மறக்காது.

*காலைமகள் வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.* குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்...

அன்னை மடியில்
20 - 08 - 1970



இறைவன் அடியில்
03 - 05 - 2004

**அமரர் தில்லைநாதன் கெங்காதரன்**
(உரிமையாளர் - தரன் மரக்காலை)
திதி: பூர்வபக்க சதுர்த்தசி (11.05.2006)

பாரினில் பாவி அவன்செய்த சோதனையால்
விலையற்ற பாசத்தினை தந்துவிட்டு பாதியிலே
பரிதவிக்கவிட்டு போய்
வேதனையின் சுமையுடன் ஆண்டுதான்
இரண்டாகின - ஆனால்
நம் மனக் குமுறல்களின் சத்தமோ ஓயவில்லை
நீர் பழகிய பசுமையான நினைவுகளில்
நெருடல்கள்
எம்மைவிட்டு ஒருபோதும் அகலாது ஐயா!
ஆண்டுகள் இரண்டல்ல கோடிகள் போனாலும்
உம்
அழகிய திருமுகம்தான் எம்மை விட்டு அகலுமா
உன்னத வாழ்வின் உயிர் ஓவியனே நீயில்லா
கொடிய
வாழ்க்கைதனில் உள்ளத்தின் வேதனையால்
நித்தம் இங்கு
உடலைப் பிழிந்து துன்பத் தீயினால் சுடுபடுகிறோம்
ஐயா!

*நந்தாவில் ஒழுங்கை*
*(சம்பியன் லேன்),*
*கொக்குவில்.* (49997)(32) **குடும்பத்தினர்.**

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

வீடியோ கமரா, (பன சொனிக் m9000) போட்டோ கமரா (Fm10 லென்ஸ் 1.4) டெக்னிக்ஸ் (BOX) யமஹா (TZR ஜப்பான்) ப்ரோலைட் (300D) ஸ்ரூடியோ திரைச் சீலைகள், கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0776118667. (50082)

### வீடு விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, மேயின் வீதியில் 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 4202623. (சி/49187)

### தவறிவிட்டது

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த, முருகன் சுஜீபன் என்பவரின் தேசிய அட்டை அடங்கிய பேஸ் அளவெட்டிக்கும், உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: அளவெட்டி தெற்கு, குருவளை, நலன்புரி நிலையம். (50080)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 73இல் பிறந்த திருவாதிரை குற்றமுள்ள, 36 பாவம் **Doctor** மணமகளுக்கும் 72இல் பிறந்த அவிட்டம் குற்றமுள்ள 19 பாவம் **Doctor** மணமகளுக்கும் 76இல் பிறந்த குற்றமுள்ள 41 பாவம் பூராடம் **Doctor** மணமகளுக்கும் **Doctor** எஞ்சினியர், பட்டதாரி, மணமகன் தேவை. தொடர்பு: **K.**சுந்தரர், கனகசபை வீதி, மானிப்பாய். (50086)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 80ஆம் ஆண்டில் பிறந்த 1இல் செவ்வாய் பாவம் 93, பூரட்டாதி ஜேர்மன் **PR** உள்ள மணமகளுக்கும் 83இல் பிறந்த பரணி குற்றமற்ற 20 பாவம் கனடா **PR** உள்ள மணமகளுக்கும் **Doctor,** எஞ்சினியர், பட்டதாரி மணமகன் தேவை. தொடர்பு: **K.**சுந்தரர், கனகசபை வீதி, மானிப்பாய். (50086)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 69இல் பிறந்த செவ்வாயுள்ள 12 பாவம் அத்தம் சொந்தக் கடை உரிமையாளரும் 71இல் பிறந்த குற்றமுள்ள 48 பாவம் மூலம் உள்ள **Contracter** வேலை செய்யும் மணமகனுக்கும் 73இல் பிறந்த பரணி குற்றமற்ற 31 பாவம் அச்சக உரிமையாளருக்கும் 76இல் பிறந்த பரணி குற்றமற்ற 8 பாவம் கேட்டை, நகைக்கடை உரிமையாளருக்கும் மணமகள் தேவை. தொடர்பு: **K.**சுந்தரர், கனகசபை வீதி, மானிப்பாய். (50086)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 67இல் பிறந்த, குற்றமற்ற திருவோணம், **P.V.T. Ld** கொழும்பில் வேலை செய்யும் மணமகனுக்கும் 72இல் பிறந்த சித்தரை குற்றமற்ற 13 பாவம் **Doctor** மணமகனுக்கும், 74இல் பிறந்த **B.B.A.** பட்டதாரி, குற்றமுள்ள 41 பாவம் பூசம் மணமகனுக்கும், 76இல் பிறந்த பரணி செவ்வாய் உள்ள 30 பாவம், பட்டதாரி மணமகன்களுக்கும் மணமகள் தேவை. தொடர்பு: **K.**சுந்தரர், கனகசபை வீதி, மானிப்பாய். (50086)

## நெடுந்தீவில் ஆலயத்துக்கு மணிக்கோபுரம்

நல்லூர்,மே11

நெடுந்தீவு தெற்கு காட்டு அம்மன் கோவிலில் புதிதாக மணிக்கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

மத்தி கிராம அலுவலர் ந.நடராசா பொது மக்களின் உதவியுடன் இத்திருப் பணியை முன்னெடுத்திருந்தார்.

சுமார் இரண்டரை இலட்சம் ரூபா செலவில் இந்த மணிக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. (111)

## பாடசாலை சமூக உருவாக்கத்திறன் செயலரங்கு

யாழ்ப்பாணம்,மே11

யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் மாணவர்களின் சமுதாய அரங்க செயற்திட்டம். யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதிகளின் சில பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.

இணுவில் இந்துக்கல்லூரி ஆரம்ப பிரிவு ஆசிரிய மாணவர்களிடையே அரங்க செயற்பாடுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இதில் மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என அனைவரும் இணைந்து பாடசாலைச் சமூகத்தை கட்டி எழுப்புவதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

*மனம் மகிழ*
*29 * 01 * 1941*



*மனம் நெகிழ*
*22 * 04 * 2005*

அமரர்
**செல்வி இராஜேஸ்வரி வல்லிபுரம்**
(ஓய்வு பெற்ற போதனாசிரியர்)

மெழுகுதிரிபோல் உமை உருக்கி
எமக்கு வெளிச்சம் தந்தவரே
பாரினில் உமக்கென்று யாருமில்லை என்றோ
விழிமூடி எம்மை விட்டுப் பிரிந்து சென்றீர் பெரியமாமி
அன்பான உங்கள் பார்வை
இனிமையான 'மானா' எனும் வார்த்தை
வஞ்சகமற்ற உங்கள் இதயம்
எழிலான உங்கள் தோற்றம்
ஆழமான உங்கள் அறிவு
பரவசமான உங்கள் பக்தி
எளிமையான உங்கள் வாழ்க்கை
தன்னலமற்ற உங்கள் சேவை
சுவையான உங்கள் உணவு
தினமும் எம்முன்னே தோன்றி மறையுதம்மா
உங்களை நான் மறந்தாலும் ஞாபகப்படுத்தவென்று
நானுறங்கும் வேளையிலே இடையிடை வந்திங்கு
காட்சிதனைக் காட்டுகிறீர் கனவெனும் பெயரினிலே
உங்கள் உயிர் பிரிந்தது போல் எமைவிட்டு
உங்கள் நினைவும் நீங்கிடுமோ. எங்கள் பெரியமாமி
உங்கள் நினைவுடனே என்றென்றும் நாமிருப்போம்.

*கி.மதுனா*
*ஆடுவான் தோட்டம்,*
*அல்வாய் கிழக்கு.*

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
23 - 03 - 1921



ஆண்டவன் அடியில்
11 - 04 - 2006

**திருமதி நவரத்தினம் சிவபாக்கியம்**

கடந்த 11.04.2006 அன்று சிவபதமடைந்த எமது அன்னையின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் தந்தர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் மற்றும் உதவிகள் பல புரிந்த நல் உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (11.05.2006) வியாழன் அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார் , உறவினர், நண்பர்கள் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சிவகாந்தபதி,*
*நீலியம்பனைப்பிள்ளையார்*
*கோயிலடி, மல்லாகம்.* (50054) (24)

எமது அன்பு தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**நடராஜா ராஜகுலசிங்கம் (சிங்கம்)**
**(ரதிவோச் வேக்ஸ் சொப் உரிமையாளர்)**



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா ராஜகுலசிங்கம் 06.05.2006 சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் சுசீலாவின் அன்புக் கணவரும் ராஜபிரசாத்தின் (கணனிப் பொறியியல் மாணவன், இந்தியா), அன்புத் தந்தையும் தங்கராசா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவஞானம் - ராஜரதி (லண்டன்), ராஜகுலேந்திரன் பேரின்பநாயகி, பரமானந்தன் ராஜரஜனி (சுவிஸ்), ராஜசேகரன் கலைச்செல்வி(கனடா), ராஜஸ்ரீதரன் விஜயகுமாரி(லண்டன்), ராஜசீலன் வசந்தி ஆகியோரின் சகோதரரும் சிறீதர் சுபத்திரா (இந்தியா), வக்ஸலா சந்திரதயன் ஆகியோரின் மைத்துனரும். த.கனரத்தினத்தின் அன்பு மருமகனும் லவன், சேந்தன், கோவிஜனனன் ஆகியோரின் மாமனும் நிரோசன் (ஆண்டு 10, யாழ். இந்து),கரணியா, கரேந்திரா, சகர்னா, வினோதன், வினோஜினி, அனோஜன், மதுரா, விதுஷன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2006) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 06 இரண்டாம் ஒழுங்கை*
*பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
நடராஜா கனகேஸ்வரி
(தாய்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் மூன்று மாத காலத்தில் 206 வீதி விபத்துக்கள்; 10 பேர் பலி!

## சத்திரசிகிச்சை நிபுணர் றோபேட் ரெய்லர் தகவல்

பரந்தன்,மே 11

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான மூன்று மாத காலப் பகுதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் 206 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதன்போது 10 பேர் பலியாகியுள்ளனர்.

இத்தகவலை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றும் வெளிநாட்டு சத்திரசிகிச்சை நிபுணரான றொபேட் ரெய்லர் தெரிவித்தார்.

வீதி விபத்துக்கள் தொடர்பான ஆய்வுப் பட்டறை ஒன்று கடந்த 5ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்றது. மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.சதானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கருத்துரையாற்றிய சத்திரசிகிச்சை நிபுணர் றொபேட் ரெய்லர் மேலும் தெரிவித்ததாவது-

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்களில் 60 வீதம் இளைஞர்களே பாதிக்கப்படுகின்றனர்.

வீதி விபத்துக்களில் பாதிக்கப்பட்டோர்களில் 60 வீதமானோர் 15 வயதிற்கும் 39 வயதிற்கும் இடைப்பட்ட வயதினை உடையவர்கள். 65 வீதமானவை உந்துருளி விபத்துக்கள். தற்போது இடம்பெறும் விபத்துக்கள் யாவும் உலக நாடுகளில் ஏற்படும் விபத்துக்களுக்குச் சமமாக உள்ளன.

வீதிச் சீர்கேடு மற்றும் ஒட்டுநர்களுக்கு வீதி தொடர்பான விதிமுறைகள் தெளிவின்மை, வீதிச் சமிக்ஞைகளை அவதானிக்காமை போன்றவைகளே இவ்வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணியாகும் - என்றார்.

இந்நிகழ்வில அரச, அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், காவல்துறை அதிகாரிகள், வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (352)

## பூம்புகார் கிராமத்தில் அபிவிருத்திச் செயலகம்

கிளிநொச்சி,மே 11

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடனும் 'நிக்கொட்' நிறுவனத்தின் அனுசரணையுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வவுனியாவிலுள்ள பூம்புகார் கிராமத்தில் அமைக்கப்பெற்ற கிராம அபிவிருத்திச் செயலகம் கடந்த 6ஆம் திகதி காலை 10 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசஅதிபர் சி.சண்முகம் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக 'நிக்கொட்' நிறுவனத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் த.கிருபாசுதன்,தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் இ.சத்தியமூர்த்தி,கிராம சேவையாளர் தெய்வேந்திரம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கட்டடத்தின் நினைவுக் கல்லையும் கட்டடத்தை அரச அதிபர் திறந்துவைத்தார். (307)

## கால்நடை அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வு

பரந்தன்,மே11

வன்னிப் பெருநிலப்பரப்பில் கால்நடை அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற் கான திட்டமிடல் கலந்துரையாடல் ஒன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையில் நிறுவன நடுவப்பணியக கேட்போர்கூடத் தில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கால்நடை வைத்தியர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பொறுப்பாளர்கள், நிறுவன திட்டமிடல் அலுவலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் மாவட்டம் தோறும் கால்நடைப் பண்ணைகள் உருவாக்குவது பற்றியும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை உருவாக்குவது பற்றியும் நல்லிணக்காளை , கடாக்களை தரமுயர்த்துதல், கொல்லைப்புற கோழிகளின் தாபனங்கள் போன்றவற்றை தருவிப்பது பற்றியும் கோழிகளுக்கான அடைப் பொறிகளைத் தருவிப்பது பற்றியும் மாவட்டங்கள் தோறும் கால்நடைப் பரிசோதனை நிலையங்கள் உருவாக்குவது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டுத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டது. (352)



புன்னை நீராவி கலைமகள் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதன்போது முன்பள்ளிச் சிறுவர்கள் உடற்பயிற்சி நிகழ்வில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.
*(படம்: பரந்தன் செய்தியாளர்)*

## மல்லாவியில் பொதுநோக்கு மண்டபம் திறந்துவைப்பு

கிளிநொச்சி,மே11

மல்லாவிப் பிரதேசத்தின் திருநகர் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டப திறப்பு விழாவும் கடன் வழங்கும் நிகழ்வும் கடந்த 3ஆம் திகதி முற்பகல் 10.30மணிக்கு பாண்டியன்குளம் கிராம இணைப்பாளர் சி.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பாண்டியன்குளம் துணுக்காய் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இப் பொதுமண்டபத் திறப்பு விழாவும் கடன் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன.

கட்டடத்தின் பெயர்ப் பலகையைத் துணுக்காய் பிரதேச உதவி அரச அதிபர் ந.நந்தகுமார் திரைநீக்கம் செய்துவைக்க பிரதானமண்டபத்தைபாண்டியன்குளம்உதவிஅரச அதிபர் ம.ஜெகா திறந்து வைத்தார்.

கிராம சேவையாளர் அலுவலகத்தினை முல்லைத்தீவு மாவட்ட சமுதாய மீள் கட்டமைப்பு திட்ட இணைப்பாளர் யோ.கோபியும் சுகாதார மண்டபத்தினை மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் காண்டீபன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சமுதாய மீள்கட்டமைப்புத் திட்டப் பணிப்பாளர் சுடர் ஆகியோரும் திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து கருத்துரைகள், சிறப்புரைகள் என்பனவும் கடன் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன. (307)

## நானாட்டான் ம.வியின் ஒன்றுகூடலும் நூல் வெளியீடும்

மன்னார், நானாட்டான் மகா வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் ஒன்றுகூடலும் 'செந்நெல்' புத்தக வெளியீடும் கடந்த 5ஆம் திகதி நண்பகல் 12மணியளவில் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றன.

நீண்டகால இடைவெளியின்பின் மீண்டும் இவ்வாண்டு உயர்தர மாணவர்களின் படைப்புகளைத் தாங்கிய 'செந்நெல்' மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது பிரதம விருந்தினராகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் பிரதேச செயலர் திருஞானசம்பந்தர்,மடுவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பத்திநாதன் குரூஸ், மன்னார் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மரியதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (352)

## இடி மின்னல் தாக்கி ஒருவர் பலி!

கிளிநொச்சி,மே11

வன்னிப் பகுதியில் அதிகரித்துள்ள இடி மின்னல் தாக்கத்தின் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார். நான்கு பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கிளிநொச்சி சுண்டிக்குளம் சிறுகடல் பகுதியில் கடநத 7ஆம் திகதி மாலை 4 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுண்டிக்குளம் சிறுகடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த கண்ணகிநகர் விசுவமடுவைச் சேர்ந்த திருச்செல்வம் ஜீவானந்தன் (வயது 21) என்பவரே மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இதேவேளை -

முல்லைத்தீவுப் பகுதியில் இருவேறு இடங்களிலும் இடிமின்னல் தாக்குதலுக்குள்ளாகி நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு,சிலாவத்தை, கிராமத்தில் அமைந்துள்ள கத்தோலிக்க பெண்கள் சிறுவர் இல்லத்தில் இருவரும் கள்ளப்பாடு தற்காலிக குடியிருப்பில் பெண்கள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காகப் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (307)

# ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்து நாடுகளிடையே கருத்து வேறுபாடு

லண்டன்,மே11

சர்ச்சைக்குரிய அணுத் திட்டத்தை கைவிட ஈரான் மறுப்பதால், அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிப்பது அல்லது போர் தொடுப்பது என்ற அமெரிக்காவின் யோசனைக்கு சீனாவும் ரஷ்யாவும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இதனால், இது தொடர்பாக நடந்த வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு தோல்வியில் முடிவடைந்தது.

ஈரான் அணு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. மின்சார உற்பத்திக்காக யுரேனியம் செறிவூட்டலில் ஈடுபட்டுள்ளது. ஆனால், அணுஆயுதங்களை தயாரிக்கவே ஈரான் யுரேனியம் செறிவூட்டலில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் குற்றம் சாட்டுகின்றன.

எனவே, ஈரான் மீது ராணுவ நெருக்கடி கொடுக்கவேண்டும் என்று ஐ.நா.பாதுகாப்பு சபையில் உள்ள வல்லரசு நாடுகளிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது. இதற்காக, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் ஒரு கூட்டத்தை கூட்டினார்.

நியூயோர்க்கில் கடந்த சனிக்கிழமை நடந்த இந்தக் கூட்டத்தில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கலந்துகொண்டனர். ரஷ்யாவும் சீனாவும் அமெரிக்காவின் வாதங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகள் ஈரானின் யுரேனியம் செறிவூட்டும் பணியை நிறுத்த 'ஏழாவது அத்தியாயத்தின் கீழ் ஒரு தீர்மானம் கொண்டு வந்துள்ளன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ரஷ்யாவும், சீனாவும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் மீண்டும் தீர்மானம் கொண்டு வருவதை ஆதரிப்பதாகவும், 'ஏழாவது அத்தியாயத்தின் கீழ் ஐ.நாவுக்கு வேண்டுகோள் விடுப்பதை எதிர்ப்பதாகவும் கூறின. இதைத் தொடர்ந்து, கூட்டத்தில் எந்தவித முடிவும் எட்டப்படவில்லை.

இதற்கிடையில், ஈரான் பிரச்சினைக்கு தீர்வு காணும்படி கோரி அந்நாட்டு அதிபர் முகமது அகமதினிஜாத், அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு கடிதம் அனுப்ப இருந்தார். பதினெட்டுப் பக்கங்கள் கொண்ட ஆங்கில மொழி பெயர்ப்புடன் கூடிய அந்தக் கடிதத்தை அமெரிக்கா நிராகரித்து விட்டது.

## தமிழக சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று

சென்னை,மே11

தமிழகத்தில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலின் வாக்கு எண்ணிக்கை இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது. 3 மணி நேரத்தில் முடிவுகள் தெரியவரும் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா தெரிவித்தார்.

வாக்கு எண்ணிக்கை மொத்தம் 82 மையங்களில் நடைபெறுகிறது.

காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகின்றது. 3 மணி நேரத்தில் ஓரளவுக்கு முடிவுகள் தெரியவந்துவிடும். உணவு இடைவேளையின்போது பெரும்பாலான தொகுதிகளின் முடிவுகள் தெரிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை - பல்வேறு காரணங்களால் 18 வாக்குச்சாவடிகளில் மறு வாக்குப் பதிவு நேற்று நடைபெற்றது.

கடந்த 1984ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலுக்கு பின் இந்த தேர்தலில்தான் அதிகளவு வாக்குகள் பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சி.ஐ.ஏக்கு புதிய தலைவர்

வாஷிங்ரன்,மே11

அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏயின் புதிய தலைவராக தேசிய பாதுகாப்பு நிறுவன இயக்குநராக இருக்கும் மைக்கேல் ஹைடனை அதிபர் புஷ் நியமித் துள்ளார்.

இந்த நியமனத்துக்கு அமெரிக்க செனட்டின் உளவு இணைக்குழு ஒப்புதல் அளிக்க வேண்டும். இதன் உறுப்பனர்கள் சிலர் ஹைடன் நியமனத்துக்கு அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சி.ஐ.ஏ. தலைவராக இருந்த போர்டர் கோஸ் கடந்த ஐந்தாம் திகதி அப்பதவியில் இருந்து விலகினார். இது அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஏஜென்ஸியின் தலைவர் ஜான் நெக்ருபான்டியுடன், போர்டர் கோசுக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டதால்தான் இந்த ராஜினாமா என்றும் கூறப்பட்டது.

## ராமதாஸ் மீது கொலை வழக்கு

சென்னை,மே11

தமிழகக் கல்வி அமைச்சர் சி.சி.சண்முகம் வீட்டருகே அ.தி.மு.க. முகானந்தன் கடந்த திங்கட்கிழமை வெட்டிக் கொல்லப்பட்டார். இது தொடர்பாக பா.ம.க. நிறுவுனர் டாக்டர் ராமதாஸ், அவரது மகனும் மத்திய அமைச்சருமான அன்புமணி உள்ளிட்ட 22 பேர் மீது பொலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித பிரான்சிஸ் சவேரியர் ஆலய
## வருடாந்தத் திருவிழா

பங்குத் தந்தை அருட்திரு பீற்றர் துரைரெத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

* 11.05.2006 வியாழன் - பிற்பகல் 5 மணிக்கு கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாள்கள் வரை நடைபெறும்.
* 19.05.2006 வெள்ளி நற்கருணை விழாவும்,
* 20.05.2006 சனி திருவிழாத் திருப்பலியும் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி 8.30 இற்கு புனித சவேரியாரின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

திருவிழாத் திருப்பலியில் பங்குகொண்டு புனிதரின் ஆசிபெற்று இன்புற்று வாழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

2ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு மத்தி. (50151)

**பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.**


## ஐ.தே.க. திட்டம்

கொழும்பு,மே11

அரசமைப்புச் சபையை அமைக்காமல் பொலீஸ் ஆணைக்குழு மற்றும் அரச சேவை ஆணைக்குழு ஆகியவற்றுக்கான உறுப்பினர்களை நியமனம் செய்த ஜனாதிபதியின் செயற்பாடு, அரசமைப்பு விதிகளுக்கு முற்றிலும் முரணானது என்பதனை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதென ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது.

ஐ.தே.கட்சி சார்பாக, அக்கட்சியின் பிரதித் தலைவரான கருஜெயசூரியா மூலம் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

## பகலில் மட்டுமே மீனவர்களுக்கு அனுமதி

குருநகர் இறங்குதுறையூடாகக் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் சென்றுதிரும்ப பகல் வேளையில் மட்டுமே அனுமதி வழங்கப்படுகிறது. காலை 6 மணிக்குச் மாலை 6 மணிக்குமே இவ் அனுமதி வழங்கப்படுகிறது. தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் தமது தொழிலை முடித்துக்கொண்டு இரவு நேரத்தில் கரைக்கு வர முடியாது. விடிந்ததும் பின்னரே அவர்கள் கரைக்கு வர முடியும்.

அத்துடன் இரவில் கரையிலிருந்து 500 மீற்றருக்கு அப்பால் தரித்து நிற்க வேண்டுமெனவும் படையினர் கட்டுப்பாடு விதித்துள்ளார்கள் என்று கூறுகின்றனர். (51)

## தீர்த்தோற்சவம்

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் நாளை வெள்ளிக்கிழமை சித்திரா பௌர்ணமி தீர்த்தோற்சவமும் தர்ப் பணாதி அனுட்டானங்களும் இடம் பெறவுள்ளன.

காலை 6 மணிக்கு அபிஷேக ஆராதனையும்தொடர்ந்துவிசேட் பூஜை, கோபுர வாயில் தரிசனம் ஆகியவை நடைபெறும்.

காலை 8 மணிக்கு புனித தீர்த் தத்தில் தீர்த்தவாரியும் 9.30 மணிக்கு தீர்த்த மண்டப அனுக்கிரகமும் இடம் பெறும்.

தீர்த்தவாரி முடிந்த பின்னர் அடியவர்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப் பணம் செய்யவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக வில்லூன்றி தேவஸ்தானம் மற்றும் புனித தீர்த்த பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

## வேலிகளை அகற்றும் படையினர்

கரவெட்டி,மே11

வடமராட்சி பிரதான வீதிகளில் உள்ள கிடுகு மற்றும் பனை ஓலைகளால் அடைக்கப்பட்ட வேலி மறைப்புக்களை அகற்றுமாறு இராணுவத்தினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

படையினர், உரிமையாளர்கள் இல்லாத வேலிகளை தமது பாதுகாப்பிற்காக அகற்றி வருகின்றனர். (70)

## புதிய சப்பற வெள்ளோட்டப் பெருவிழா



கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்திற்கு கைதடி தெற்கைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வசித்து வருபவருமாகிய திரு.இரா.மேகநாதன் அவர்கள் புதிதாக சித்திரச் சப்பறம் ஒன்றை ரூபா 7.5 லட்சத்திற்கு செய்து வழங்கியுள்ளார்.

இச்சித்திரச் சப்பறத்தினை நாவற்குழி தச்சன் தோப்பைச் சேர்ந்த திரு. இராசையா யோகேஸ்வரன் தனது கைவண்ணத்தில் ஆக்கியுள்ளார். இதற் கான வர்ணப் பூச் சினை நீர்வேலி வடக் கைச் சேர்ந்த திரு. சங் கீதன் அவர்கள் செய்துள்ளார்.

மேலும், இன்று(11.05.2006) மாலை 5 மணிக்கு புதிய சித்திரச் சப்பறத்தின் சப்பறத் திருவிழாவும் நடைபெற இருக்கின்றது என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

*திருவிழா உபயகாரர்கள்.*


## PATRICIAN INSTITUTES
### பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

**தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

**ஆரம்பம் : 17.65.2666**

I.

| Course | Duration |
|---|---|
| A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1 YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION 6 MONTHs |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHs |
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION 4 MONTHs |
| E. DIPLOMA IN DEST TOP PUBLISHI -NG | DURATION 6 MONTHs |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION 3 MONTHs |
| G. INTERNET & E-MAIL | DURATION 1 MONTH |
| H. DIPLOMA IN INTERNET TECHNO LOGY. | DURATION 5 MONTHs |

**வாகனத் தகுதிச் சான்றிதழ் 2006**

*2006ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

II. CERTIFICATE COURSES

1. MS WORD - 2000
2. MS EXCEL - 2000
3. MS ACCESS - 2000
4. MS POWER POINT
5. VISUAL BASIC VER 6.5
6. PASCAL
7. d. BASE III+
8. PAGE MAKER
9. WINDOWS 95
10. COREL DRAW
11. d BASE FOR WINDOWS
12. PHOTO SHOP DELUX
13. ADOBE PHOTO SHOP
14. QUICK BOOK

**EACH 3 MONTHS**

III.

| Course | Duration |
|---|---|
| 1. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 2. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| 3. மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol & diesel வாகனங்களின் இலகுவான செய்முறை மூலம் கற்பிக்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 4. ஜெனரல் எலக்ரிஸன் (மின்சார இணைப்பு மோட்டார் ரிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| 5. வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் (Oscilloscope (அசைவுகாட்டி) இனை கையாள்தலுடன் கூடிய முழுமையான பயிற்சியும் செயன்முறையும்) | காலம் 8 மாதங்கள் |
| 6. கடைச்சல் இயந்திர தொழிற் பயிற்சி (ON THE JOB TRAINING) வழங்கப்படும். | காலம் 3 மாதங்கள் |
| 7. மின் ஒட்டுநர் பயிற்சி (ARC WELDING & GAS WELDING ON THE JOB TRAINING) வழங் கப்படும். | காலம் 6 மாதங்கள் |
| 8. மரவேலை (With use of Machinery) (ON THE JOB TRAINING) வழங்கப்படும். | காலம் 6 மாதங்கள் |
| 9. குளிர்சாதனப் பெட்டி திருத்துதல். | காலம் 6 மாதங்கள் |
| 10. PLUMPING | காலம் 6 மாதங்கள் |
| 11. MASONARY | காலம் 6 மாதங்கள் |

குறிப்பு:

1. பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் ஆதாரங் காட்டி பங்குத்தந்தையாரின் (PARISH PRIEST) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெறலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
REGISTRAR
PATRICIAN INSTITUTE
59, ST. PATRICK'S ROAD, JAFFNA.
T.P. No: 021 222 6148
Fax : 021 222 6148
E.Mail : SPitee@Slt net. lk.

*எமது நிறுவனத்தில் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும். அத்துடன், சகல விதமான இரும்புசார் உற்பத்திப் பொருள்களும், ஒட்டுவேலைகளும், மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலம் ஒழுக்கு விரைவாகவும் திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.*

## PATRICIAN INSTITUTES VACANCY

### POST OF RADIO AND T.V. REPAIRING INSTRUCTOR

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் உரிய ஆவணங்களுடன் 20.05.2006 இற்கு முன் நேரில் சமுகம் தரவும்.

குறிப்பு: [Oscilloscope (அசைவுகாட்டி) உபகரணம் பாவிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.]

மேலதிக விவரங்களுக்கு:
பதிவாளர்,
**பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனம்**
*59, St. Patrick Road, Jaffna.T.P. 222 6148.*

(C-49241)



## சீருட்டிய நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி. யாழ்ப்பாணம்

T.P.: 0777-903090
0777 246117



*அறிவுள்ளோரின் தெரிவு*

## றோயல் குளுக்கோஸ்

**100 % சுத்தமானது**

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By: ROYAL INDUSTRIES COLOMBO-12 ☎0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்





ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
☎ 021 222 2567

**100g றோயல் குளுக்கோசின் ஆகக்கூடிய சில்லறை விலை 23.90**


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சங்கச் செயற்குழு உறுப்பினரும் சக உத்தியோகத்தருமாகிய *திருமதி அ.செல்வநாயகி* அவர்களின் தந்தை அமரர்

**பெரியதம்பி பெருமாள்** அவர்களின்

ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் நாமும் கலந்து பிரார்த்திப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள்
சுகாதாரப்பகுதி, யா.மா.சபை.

(50096)

## மரண அறிவித்தல்

### *திருமதி சிவஞானசுந்தரம் ஞானேஸ்வரி*

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி சிவஞானசுந்தரம் 09.05.2006 செவ்வாய்க்கிழமையன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும் உதயசெல்வன் (நீர்கொழும்பு), உதயசீலன்(பிரான்ஸ்) மற்றும் ஜேர்மனியில் வசிக்கும் உதயரூபன், உதயஜீவன், உதயபவன், உஷா ஆகியோரின் பாசமிகு தாயும் செல்வராணி(ஜேர்மனி), கமலநாதன் (ஜேர்மனி), ஞானரஞ்சிதம்(சுவிஸ்) மற்றும் வசந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் இடம்பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கட்டப்பிராய்,*
*யாழ்ப்பாணம்* (50097)

*தகவல்:*
**உதயசெல்வன்-மகன் (நீர்கொழும்பு)**
**திருமதி ப.வசந்தராணி (சகோதரி).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைத் தலைமை நாடுகள் புலிகளுக்கு அழுத்தம் தருமா என ரத்னதேரர் கேள்வி

இணைத்தலைமை நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் தருமா? என நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் கேள்வி எழுப்பினார் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண.அத்துரலிய ரத்னதேரர். அவசர காலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிய போது அத்துரலிய தேரர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகளின் வன்முறை நடவடிக்கைகளை நிறுத்தச் செய்து - அவர்களைப் பேச்சு மேசைக்கு அழைத்து சமாதானத்தை உருவாக்க சர்வதேச நாடுகளும், இணைத் தலைமை நாடுகளும் புலிகளுக்கு எந்தவித அழுத்தத்தைக் கொடுக்கப்போகின்றன?

அமைதியை நிலைநாட்ட அரசு முயற்சி செய்துகொண்டு வருகின்ற போதிலும் அதைக் குழப்பியடிக்கும் முயற்சியில் புலிகள் இறங்கியுள்ளனர். சமாதானப் பேச்சில் புலிகளுக்கு கொஞ்சம்கூட விருப்பம் இல்லை.

இந்த நிலையில், இணைத்தலைமை நாடுகள் என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றன என்பதை எமக்குத் தெரிவிக்கவேண்டும்.

இலங்கையில் யுத்தம் ஒன்று ஏற்பட்டால் சர்வதேச உதவிகளுடன் அந்த யுத்தத்தை முறியடிக்க வேண்டும். இலங்கைப் பிரச்சினை தொடர்பாக ஜப்பானின் நிலைப்பாடு என்ன என்பதை ஜப்பான் தெளிவாகக் கூறவேண்டும். ஜப்பான் எமது நேச நாடு. நோர்வே கொண்டுள்ள நிலைப்பாட்டோடு ஒத்த நிலைப்பாட்டை ஜப்பான் கொண்டுள்ளதா என அறியவேண்டியது எமது கடமை. இருப்பினும், இந்த நாடுகள் புலிகளைப் பேச்சு மேசைக்கு வரவழைக்கப்பாரிய அழுத்தம் ஒன்றைக் கொடுக்க வேண்டும் - என்றார். (த-07)

# கடத்தப்பட்ட இளைஞர் குறித்து முறைப்பாடு

பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் இரவு வெள்ளைவானில் இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்ட இளைஞன் கோபியின் பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

சிகையலங்கரிப்பு நிலையத்தில் கடமையாற்றும் தமது மகன் எத்தகைய குற்றச் செயல்களிலும் ஈடுபடாதவர் என்றும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளார்கள்.

குறிப்பிட்ட சிகையலங்கரிப்பு நிலையத்தைச் சேர்ந்த கோபியுடன் கடத்தப்பட்ட மற்றவர் பற்றிய முறைப்பாடு எதுவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (86)

# வாள்வெட்டில் காயம்

வீதியில் வந்தவர் இனந்தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார். இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். (117)

# மேற்படிப்புக்காகச் சென்றவரை காணவில்லை என்று முறைப்பாடு

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிநாட்டுக்கு மேற்படிப்புக்காக புறப்பட்டுச் சென்ற மாணவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அவரது பெற்றோர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை செட்டியார்மடத்தைச் சேர்ந்த மகேஸ்வரன் உமாதரன் என்ற மாணவர் கடந்த 6ஆம் திகதி வெளிநாடு செல்வதற்கென நீல நிற வானில் கிளிநொச்சி கண்டாவளையைச் சேர்ந்த சாரதி கந்தசாமி ஈழரங்கன் என்பவருடன் புறப்பட்டுச் சென்றார்.

இருவரும் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியை அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணியளவில் சென்றடைந்துள்ளனர்.

அதன் பின்னர் இருவர் தொடர்பாகவும் வான் குறித்தும் மாணவரின் பெற்றோருக்கும் சாரதியின் உறவினர்களுக்கும் எதுவித தகவலும் கிடைக்கப்பெறவில்லை.

இதையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலக அதிகாரிகளிடம் மகேஸ்வரனின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

டபிள்யூ.பி ஜேயூ 7533 என்ற பதிவு இலக்கமுடைய வானில் தனது மகன் புறப்பட்டுச் சென்றார் என்று முறைப்பாட்டில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வன்செயல்கள் தொடராமல் தடுக்கவே அவசரகாலச் சட்டம் நடைமுறையிலாம்

வன்செயல்கள் தொடராமல் இருப்பதற்காகவே அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

- இவ்வாறு மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணையைச் சமர்ப்பித்து அதன் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

சமாதானத்தை - ஒரு சுமூக நிலையை - உருவாக்குவதற்காக அரசும் புலிகளும் அமைதிப்பேச்சை ஆரம்பித்தபோதிலும் புலிகள் அதற்கு அமைவாகச் செயற்படவில்லை. அதன்பிறகும் புலிகள் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி வருகின்றனர்.

ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் 70 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அது இன்னும் அதிகரித்துக் கொண்டு போகும் நிலையே தோன்றியுள்ளது.

இந்தநிலை தொடராமல் இருப்பதற்காகவே நாம் தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அதேபோல் இரண்டாம் கட்டப்பேச்சை நடத்த நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம். புலிகள் கேட்ட ஹெலிகொப்டர் வசதிகளைச் செய்து கொடுத்து அவர்களைப் பேச்சு மேசைக்கு அழைத்துச்செல்ல நாம் தொடர்ந்தும் பாடுபட்டுவருகிறோம் - என்றார் அவர். (த-07)

# லயன்ஸ் கழக மாநாடு

தென்மராட்சி,மே 11

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாநாடு எதிர்வரும் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண லயன்ஸ் கழகத்திற்கு மாவட்ட ஆளுநர் லயன் சரத் குணசேகர அறிவித்துள்ளார்.

சர்வதேச லயன்ஸ் கழக 306பி மாவட்டம் கடந்த வருடம் 306பி1, 306பி2 என இரண்டு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (117)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் S.A.குணரட்ணம்

**Rtd. Chief M.L.T.Teaching Hospital, Jaffna.**

தோற்றம் 08-09-1926 — மறைவு 09 -04-2006

எமது இல்லத்தலைவரின்பிரிவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்து இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள், மலர் வளையங்கள் சமர்பித்தவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம், கடித மூலம் எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

செபவழிபாட்டில் கலந்துகொண்ட குருக்கள், அருள்சகோதரிகள் புனித வின் சென்டிபோல் சபை உறுப்பினர்கள், புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்கள் சங்க உறுப்பினர்கள், திருஇருதயநாதர் சபை அங்கத்தவர்கள் மரியாயின் சேனை, மாதா கூட்ட அங்கத்தவர்கள் யாவருக்கும் எமது நன்றிகள்.

நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் இருந்தபொழுது அவரைப் பராமரித்த வைத்தியர்கள், தாதிமார்கள், ஆய்வுகூட அன்பர்கள் யாவருக்கும் மற்றும் 09.05.2006 செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் நடைபெற்ற இரங்கல் திருப்பலியிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டவர்களுக்கும் எமது நன்றிகள்.

'குணபூரன்'
பிடாரி கோவிலடி, கொக்குவில். (50032)

திருமதி அ.குணரட்னம்
மற்றும் குடும்பத்தினர்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

778 நீலம்

தனுசு

09-05-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4252954 - 4266844

வெற்றி இலக்கங்கள் 07 19 28 47

ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/- வெல்லப்படவில்லை

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 6,891,370/-
தொடர் இல. 4266845 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் [illegible]

| இசையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,03,466 | 10/- | 30,34,660/- |
| 2 இலக்கங்கள் | 27,911 | 20/- | 5,58,220/- |
| 1 இல+லக்கினம் | 27,658 | 30/- | 8,29,740/- |
| 2 இல+லக்கினம் | 2,470 | 100/- | 2,47,000/- |
| 3 இலக்கங்கள் | 739 | 500/- | 3,69,500/- |
| 3 இல+லக்கினம் | 80 | 5,000/- | 4,00,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 5 | | 58,39,120/- |
| முச்சக்கர வண்டிகள் | | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,62,333 | | 68,91,370/- |

அடுத்த செவ்வாய்க்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 16,77,700/-

| | |
|---|---|
| காலி | 4259055-2-81 |
| பொலன்னறுவை | 4255697-6-75 |
| மாத்தளை | 4263819-6-71 |
| கொழும்பு | 4263887-5-46 |
| அம்பாறை | 4257988-4-67 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03



## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜக்சனின்
கிங் - கொங் King Kong
தங்கத் தமிழ் மொழியில்
(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

## ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
10.30, 2.30, 6.30, 9.30 முற்பதிவு செய்துகொள்ளலாம்

## நாகம்ஸ் சுன்னாகம்
ரஜினி, ரோஜா, ராதாரவி நடித்த.
உழைப்பாளி


## காணவில்லை



சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்திற்குப் புத்தூர் - சாவகச்சேரி வீதியூடாக 24.04.2006ஆம் திகதி காலை 8 மணியளவில் சிவப்பு நிற NP MC 0200 BOXER மோட்டார் சைக்கிளில் கடமையின் நிமித்தம் பயணித்த எமது சங்கக் கிளைமுகாமையாளரான அச்சுவேலி வடக்கு, கதிரிப்பாயைச் சேர்ந்த

### நாகமுத்து சிறீபவன்

என்பவரை இன்றுவரை காணவில்லை.
இவர் தொடர்பான விவரம் தெரிந்தவர்கள் எமக்கு உடன் அறியத் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தலைவர்,
சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம்,
டச்சுவீதி,சாவகச்சேரி.
(50045)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் பொதுச்சேவை முகாமைத்துவ உதவியாளராக கடமைபுரியும்
**க.சந்தசாமி** அவர்களின் அன்புமகள்
**செல்வி நித்தியகல்யாணி கந்தசாமி**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்.
(50099)

## மரண அறிவித்தல்கள்

### றோக் அன்ரன் செல்வன்



நாரந்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வாழ்ந்தவருமான றோக் அன்ரன் செல்வன் கடந்த 06.05.2006 அன்று அகாலமரணமானார்.

அன்னார் றோக் அன்ரன் - மரீனா (ரஞ்சினி) தம்பதியரின் மூத்த புதல்வனும் டெசிலாராணியின் அன்புக் கணவரும் அகிலன், மனோஜ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை ஞானப்பு, காலஞ்சென்ற யோசேப்பு, றீற்றா (சின்னமணி-கனடா) ஆகியோரின் அருமைப் பேரனும் திரு திருமதி புஸ்பராணி, அலோசியஸ் (சுவிஸ்) ஆகியோரின் மரு கனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

J.கிறிஸ்ரி,
29/6, புதுவீதி,
கொய்யாத்தோட்டம். (50151)

தகவல்:
தேவி, கிறிஸ்ரி (றாஜன்),
ப.மாறி குடும்பம்.

### வெற்றிவேலு நீலேந்திரன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு நீலேந்திரன் அவர்கள் நேற்று (10.05.2006) புதன்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெற்றிவேலு - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் இந்திராதேவியின் அன்புக் கணவரும் கிருபாகரன், சுதாகரன், பிரதீபா (லண்டன்), யசோதரன், சரிதா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.05.2006) வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு. (சி-49244)

தகவல்: மகன்
(கரன் வோச் அன் றேடியோ, கரன் எலக்ரோனிக்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியங்காட்டில் வைத்து படையினரால்

# கைதான இளைஞனின் உடலில் காயங்கள் சட்ட வைத்திய பரிசோதனைக்கு உத்தரவு!

யாழ்ப்பாணம்,மே11

கல்வியங்காட்டுச் சந்திப் பகுதியில் வைத்து கடந்த 5ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இளைஞன் படையினரால் தாக்கப்பட்டுள்ளார். அவரது உடலில் காயங்கள் காணப்பட்டமையால் அவரைச் சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

வாகனம் ஒன்றில் வந்திறங்கிய படையினரால் இந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் இருந்து ரி-56 ரகத் துப்பாக்கிகள் 2, கிரனேட்டுகள் 2 ஆகியன மீட்கப்பட்டன என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

பிரஸ்தாப இளைஞனைப் பின்னர் படையினர் கோப்பாய்ப் பொலீஸில் ஒப்படைத்தனர். அதன் பின்பு அவர் குற்றப்புலனாய்வுப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைதான நபர் தொடர்பான அறிக்கை ஒன்றைப் பொலீஸார் நேற்று யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் சமர்ப்பித்தனர். அதனை ஆராய்ந்த நீதிவான் பிரஸ்தாப நபரை அவசரகாலச்சட்டத்தின்கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கான அனுமதிக் கடிதம் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரிடம் இருந்து பெறப்பட்டுள்ளதா எனப் பொலீஸாரிடம் கேள்வி எழுப்பினார்.

அந்தக்கடிதம் இதுவரை பெறப்படவில்லை எனப் பொலீஸார் தெரிவித்தனர். உடன் அக்கடிதத்தைப் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

அதன்பின்னர் நீதிவான் பொலீஸ் நிலையத்துக்குச் சென்று பிரஸ்தாப இளைஞனை நேரில் பார்வையிட்டார். அவரது உடலில் அடிகாயங்கள் காணப்பட்டதையடுத்து, அவரை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலைப்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ம)

# அரச அதிகாரிகளைத் திரட்டி பலாலியில் இராணுவம் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே11

யாழ். குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து யாழ். மாவட்ட இராணுவத் தளபதி, அரச உயர் அதிகாரிகளைப் பலாலிக்குத் திரட்டி சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளார். நேற்றுமுன்தினம்மாலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மாவட்டத்தின் அத்தியாவசிய சேவைகள் தொடர்பான அதிகாரிகள் கலந்துகொண்டனர் என்று படைத் தரப்புக் கூறியது.

இந்தக் கலந்துரையாடலின்போது மாவட்டத்தில் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கு படைத் தளபதி விளக்கமளித்தார் என்று பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ். குடாநாட்டில் பணிபுரியும் அரச ஊழியர்கள், அதிகாரிகள் ஆகியோர் படையினரின் சோதனைகளின் போது இடையூறுகள் இன்றிப் பயணிப்பதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு விசேட அடையாள அட்டை ஒன்று வழங்கப்படவுள்ளது என்றும் இந்தச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. இதற்காக அரச ஊழியர்களின் விவரங்களை அந்தந்தப் பிரதேச செயலர்கள் ஊடாகப் பெற்றுத் தரும்படியும் படைத் தளபதி அச்சந்திப்பில் கேட்டுக்கொண்டார்.

மேலும், குடாநாட்டிலுள்ள வைத்திய சாலைகளுக்குத் தேவைப்படும் மருந்துப் பொருள்களைக் கப்பல் மூலம் எடுத்து வந்து உடனுக்குடன் விநியோகிக்கவும் -

நோயாளர்களை ஏற்றிச்செல்லும் அம்புலன்ஸ்களை அடையாளம் கண்டு, சோதனைச் சாவடிகளில் எந்தவிதச் சோதனைகளும் இன்றிப் பயணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தளபதி அங்கு தெரிவித்துள்ளார்.

அரச சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகளுக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் தாம் தருவோம் என்றும் அவர் கூறினார்.

அத்தியாவசிய சேவைகளில் உள்ள அரச ஊழியர்கள் முகமாலைச் சோதனைச் சாவடி ஊடாக விரைவாகப் பயணிக்கத் தேவையான வழிவகைகள் ஏற்படுத்தப்படவுள்ளது. இரவு நேரத்தில் அல்லது நள்ளிரவு நேரத்தில் மனிதாபிமான முறையில் முகமாலை உட்செல்லும் மற்றும் வெளிச்செல்லும் சோதனைச் சாவடி ஊடாக பயணம் செய்யவேண்டி ஏற்பட்டால் அதனை உடனே திறந்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தளபதி மேலும் கூறினார். (ம)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஜனாதிபதி வந்துசென்றவேளைகளில் நாடாளுமன்ற வீதியில் போக்குவரத்து நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம- க)

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஒட்டுப்படைகளால் கிளைமோர் வைக்கப்பட்டு அதில் இறந்த எம் சகோதரர்களுக்காகவும் -

07.05.2002 அன்று யாழ்ப்பாணத்தில் நள்ளிரவுவேளை கோயில் கும்பாபிஷேக ஏற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 8 இளைஞர்கள் இரவோடு இரவாகக் கொல்லப்பட்டதைக் கண்டித்தும் -

இந்தப் பூரண கதவடைப்பைச் செய்கிறோம்.

இம்மூன்று தினங்களும் சகல திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள், வர்த்தக ஸ்தாபனங்கள், பாடசாலைகள் என அனைத்தையும் மூடி, அத்தியாவசியப் போக்குவரத்துகள் தவிர்ந்த ஏனைய போக்குவரத்துச் சேவைகளையும் நிறுத்தி அரச பயங்கரவாதத்தின் வன்முறைகளை உலகறியச் செய்வோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-த)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கூட்டமைப்புடன் தனியான பேச்சுகளைத் தாம் நடத்த வேண்டுமென்று கூட்டமைப்பின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜாவிடம் கோரிக்கை விடுத்தார் ஜனாதிபதி.

இதற்கு பதிலளித்திருக்கும் மாவை சேனாதிராஜா எம்.பி., கட்சியின் இதர நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடிவிட்டு முடிவொன்றைத் தாம் அறியத்தருவாரென ஜனாதிபதியிடம் குறிப்பிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-க)

## வன்முறைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்ற சூழ்நிலைக்கு இரு தரப்புகளுக்கும் இடையேயான நம்பிக்கையீனமே காரணமாகும்.

இலங்கை அமைதி முயற்சிகளின் விசேட தூதுவராக நான் பொறுப்பேற்ற பின்னர் நிலவும் மோசமான ஒரு காலப்பகுதி இதுவென நான் கருதுகிறேன்.

அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்தபோது அவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்கள் குறித்துப் பேசினேன்.

அரச படையினர் தமது கடமைகளைத் தவிர ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென்பதைப் புலிகள் வலியுறுத்திக் கூறுகின்றனர். இதனை நான் அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளேன். இருதரப்புக்கும் இடையிலான நட்புறவு மிக மோசமான நிலையை அடைந்துள்ளதால் உடனடி நேரடிப்பேச்சே இப்போது அவசியம். இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று நாம் நம்புகிறோம்.

இணைத்தலைமை நாடுகளின் ரோக்கியோ கூட்டத்தில் இந்தியா பார்வையாளராகக் கலந்துகொள்ளுமென எதிர்பார்க்கின்றோம். இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகள் அனைத்தும் நாட்டின் அனைத்துப் பிரதேச மக்களுக்கும் பகிரப்பட வேண்டுமென்ற அடிப்படையில் ரோக்கியோப் பிரகடனத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சிக்கு நான் சென்றபோது என்னைச் சந்திக்கப் புலிகளின் தலைவர் மறுத்தார் என வெளிவந்த செய்திகள் தவறானவை. பிரபாகரன் என்னைச் சந்திக்க முடியாமைக்காகத் தெரிவிக்கப்பட்ட காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவை. இது தொடர்பில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் என்னிடம் வருத்தம் தெரிவித்தார். - என்றார் அகாஷி. (ம-க)

## வேலணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரையும் கைது செய்துள்ளனர் என்றும் கூறப்பட்டது. இது குறித்து இவர்களது உறவினர்கள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

இவர்களில் தமிழ்ச்செல்வன் இம்மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார். இவர்களது வீட்டைச் சோதனையிட வந்த கடற்படையினர் இவர்களைக் கைதுசெய்தனர்.

பிற்பகலில் இந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் இலந்தைவனம் பிள்ளையார் கோயிலில் அனைவரையும் ஒன்று திரட்டி தலையாட்டிமுன்பாக விட்டுச் சோதனை செய்தனர். அப்போது வயோதிபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கான தமிழரசுக் கட்சி வேட்பாளரான சு.பாலச்சந்திரன் (வயது 62) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். (ம-7-190)

# தமிழ் மக்கள் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரைக்கு அரசின் பதிலாகவே நிமால் சிறிபால டிசில்வா அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றினார். அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று (அதாவது நேற்றுமுன்தினம்) இச்சபையில் உரையாற்றியபோது அரசு, அரச படையினருடனும், துணைப்படையினருடனும் இணைந்து தமிழ் மக்கள் மீது 'அரச பயங்கரவாதத்தை, மேற்கொண்டு வருவதாகக் குற்றஞ்சாட்டினார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காகவே முன்வைக்கப்பட்டுள்ளன என்பதை நான் அரசின் சார்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல் கூட வடக்கு - கிழக்குத் தமிழ் மக்கள் மீது அரசு கட்டவிழ்த்துவிட்டிருக்கும் 'அரச பயங்கரவாதத்தின்' நேர் விளைவே எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை வெளியிட்டிருந்தது. அதைப் பார்த்து நாம் அதிர்ந்து போனோம்.

ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் பயங்கரவாதத்தை வன்மையாகக் கண்டிக்கின்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் வன்முறையை நியாயப்படுத்தி அறிக்கை வெளியிட்டிருப்பதையிட்டு நான் வியப்படைகிறேன். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

''பயங்கரவாதிகள் தங்களது செயற்பாடுகளை நியாயப்படுத்த எவ்வாறான சாக்குப்போக்குகளை முன்வைக்க முயன்றாலும் அதற்கு இடங்கொடுக்கக்கூடாது. அவர்கள் எப்படிப்பட்ட காரணங்களைக் கூறினாலும் மொத்தத்தில் பயங்கரவாதம் நியாயப்படுத்தப்படவே முடியாதது.'' - என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் அரச படையினர் மீது தாக்குதல் நடத்துகின்றனர். இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மௌனமாக உள்ளனர்.

உதாரணமாக, ஏப்ரல் 10ஆம் திகதி புலிகள் மிருசுவில், ஏ-9 பாதையில் நடத்திய தாக்குதலில் 05 படையினரும், 02 பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

மறுநாள் 11ஆம் திகதி விடுமுறையில் சென்ற கடற்படையினரின் பஸ் மீது திருகோணமலை, தம்பலகாமத்தில் வைத்து புலிகள் கிளைமோர் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதலில் அந்த பஸ்ஸில் பயணித்த 10 கடற்படையினரும் மேலும் ஒரு பொதுமகனும் கொல்லப்பட்டனர். 02 வெளிநாட்டவர்கள் காயமடைந்தனர்.

மே மாதம் நான்காம் திகதி வவுனியா நகரில் உள்ள பொலீஸ் சோதனைச் சாவடி மீது புலிகள் கைக்குண்டுத் தாக்குதல்களை நடத்தினர். அதில் ஒரு இராணுவச் சிப்பாயும், இரு பொலீஸாரும் கொல்லப்பட்டனர். படையினர் எதிர்த்தாக்குதல் நடத்தியபோது 10 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இவை தவிர இங்கு குறிப்பிடப்படாத எத்தனையோ வன்முறைச் சம்பவங்களில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

படையினருக்கு எதிராகப் புலிகள் மேற்கொள்ளும் பரவலான கிளைமோர் மற்றும் குண்டுத் தாக்குதல்களுக்கு பொதுமக்களைப் புலிகள் பொறுப்பானவர்களாகக் காட்டுகின்றனர். இதைப் பார்த்துக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மௌனமாக இருப்பதும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகும்.

இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது தமிழ் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு அவர்கள் துரோகமிழைக்கின்றனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான திருகோணமலை சம்பூர் பகுதியில் ஏப்ரல் 25ஆம் திகதி படையினர் மேற்கொண்ட வான் தாக்குதல் தொடர்பாக மாவை சேனாதிராஜா முன்வைத்த குற்றச்சாட்டுக்கு நான் பதில் சொல்லவிரும்புகிறேன்.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதலாக பொதுமக்களின் குடியிருப்புகள் மீது படையினர் சம்பூர் தாக்குதலை நடத்தினர் என அவர் குற்றம் சுமத்தியிருந்தார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர், அரச சமாதானச் செயலகத்தின் செயலாளர் நாயகம் பாலித கோஹென்னாவை ஏப்ரல் 28ஆம் திகதி சந்தித்துப் பேசியபோது, விமானப் படையினரும், கடற்படையினரும் சம்பூரில் உள்ள புலிகளது நிலைகள் மீதும் அலுவலகங்கள் மீதும் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் வேண்டுமென்று படையினர் தாக்குதல் நடத்தவில்லை என்றும் கூறியிருந்தார்.

புலிகள் திருகோணமலையில் - குறிப்பாகக் கடற்படையினர் மீது - மேற்கொண்டு வந்த தாக்குதலுக்கு பதில்கூறும் விதமாக மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டனர்.

திருகோணமலையில் உள்ள முக்கியமான கடற்படை நிலைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் புலிகள் விடுத்த தாக்குதல் அச்சுறுத்தலை நடுநிலைப்படுத்துவதற்காகவே படையினர் இதை நிறைவேற்றினர்.

அரசும், சமாதான விரும்பிகளும் ஆழமாகக் கருத்திற்கொள்ளும் ஒருவிடயம், சிங்களவர்கள் மீது தாக்குதல் நடத்தி அதன் மூலம் இனக் கலவரத்தை உருவாக்குவதற்கு புலிகள் மேற்கொள்ளும் முயற்சி பற்றியதாகும்.

திருகோணமலைச் சந்தையில் சைக்கிள் ஒன்றில் குண்டை மறைத்துவைத்து வெடிக்கச் செய்தனர் புலிகள். சிங்கள வியாபாரிகள் அதிகமாகவுள்ள அச்சந்தையின் மரக்கறிக் கடைகள் நிறைந்த பகுதியிலேயே இக் குண்டு வெடிப்பு இடம்பெற்றது. தமிழர்களும், சிங்களவர்களும் கொல்லப்பட்டனர்.

(மிகுதி நாளை)

## தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல செய்தி வட்டாரங்கள் தகவல்களைப் பரபரப்பாக வெளியிட்டன.

தலைவர் பிரபாகரனின் செய்தி அடங்கிய விசேட கடிதம் ஒன்றை அகாஷி கிளிநொச்சியிலிருந்து எடுத்து வந்தார் என்றும் கூட செய்திகள் வெளியிடப்பட்டன.

ஆனால், கிளிநொச்சி வட்டாரங்கள் இத் தகவல்களை அடியோடு மறுத்தன.

முதல் சுற்று ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட வன்முறைகள், கொடுமைகள், கொலைகள் போன்றவற்றின் விவரங்கள் அடங்கிய ஆவணம் ஒன்றே அகாஷியிடம் கையளிக்கப்பட்டது என்றும் -

தற்போதைய வன்முறை நிலைமை நீடித்தால் இனி இடம்பெறப்போகின்ற நடவடிக்கைகள் எப்படி அமையும் என்பதைப் புலிகள் அகாஷியிடம் கோடி காட்டினர் என்றும் -

கிளிநொச்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய நிலைமை நீடித்தால் புலிகள் எதிர்காலத்தில் கடைப்பிடிக்கும் போக்கு எப்படி அமையும் என்பது தொடர்பாக அகாஷியிடம் தெரிவிக்கப்பட்ட தகவல்களை வேண்டுமானால் அரசுக்குக் கூறப்பட்ட அறிவிப்பாகவும் கொள்ளமுடியும் என அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (உ)

## கொழும்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டமொன்று ஜப்பானில் நடைபெறவுள்ளதால், அதில் பார்வையாளராக கலந்துகொள்வதற்கு இந்தியா முன்வரவேண்டுமென்ற கோரிக்கையையும், யசூசி அகாஷி தமது புதுடில்லி பயணத்தின் போது முன்வைக்கவுள்ளார் எனக் கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் கூறின. (ம-க)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org